**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.23**
**Defence**
**Court**

**Name** **: ராஜாமுகம்மது**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 28.12.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருநெல்வேலியில் குடியிருக்கிறேன். முன்னர் செங்கோட்டை பிகேபி காம்பவுண்டில் குடியிருந்தேன். நான் பலசரக்கு வியாபாரம் செய்துவந்தேன். வழக்கில் புகார் கொடுத்த அலாவுதீன் என்பவரை தற்போதுதான் தெரியும். நான் எந்த கட்சியிலும் உறுப்பினராக இல்லை. வழக்கு சம்பந்தமாக அலாவுதீன் கொடுத்த புகார் பற்றி எனக்கு

எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. எனக்கு இடது கன்னத்தின் கீழும், தலையிலும் , கையிலும் வெட்டுக்காயங்கள் உள்ளது. கடந்த 2007 ம் ஆண்டு கூலக்கடை பஜாரில் வைத்து எனக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்டது. என்னுடைய பலசரக்கு கடைக்கு சாமான் வாங்குவதற்காக 14.08.2007 தேதி காலை 10.00 மணியளவில் கூலக்கடை பஜாரில் பொருட்கள் வாங்கி கொண்டிருந்தேன். அப்போது கூட்டமாக வந்து அங்கிருந்தும் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டார்கள். அதில் எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதும் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். அபுஅயூப் அன்சாரி, சைய்யது அலி , பசுலுதீன், மசூது, மொசாக் என்ற முகமது இஸ்மாயில் , பசீர் , ஆகியோரை வழக்கிற்கு பின்னர் தெரியும். 2007 ம் வருடம் பசீர் , அசன்கனி , நாகூர் மீரான் ஆகியோர் இறந்தவிபரம் பின்னர் தெரியும் . போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையின் போது மேற்கண்ட விபரங்களை தான் கூறினேன்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரித்தபோது எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் உட்பட பலரும் தென்காசி அம்மன் சன்னதி தொழுகை பள்ளி வாசலை புதிதாக எடுத்து கட்ட நாங்கள் ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது தென்காசி இந்து முன்னனி தலைவர் குமார் பாண்டியன் அதற்கு தடையாக இருந்து வந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக 2006 ம் ஆண்டு டிசம்பர் 6 ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தை நாங்கள் கருப்பு தினமாக அனுசரித்தபோது இந்து முன்னனி தலைவர் குமார்பாண்டியன் இந்து எழுச்சி

நாளாக அறிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியதாகவும் அதனால் அதற்கு நடவடிக்கை எடுக்க பள்ளிவாசலை சேர்ந்த நபர்களும் நாங்களும் ஆலோசனை செய்தோம் என்றும் அதன் தொடர்ச்சியாக 17.12.2006 ம் தேதி குமார் பாண்டியனை எங்களது தரப்பை சேர்ந்த ஹனிபா, அப்துல்லா, செய்யது சுலைமான்சேட் கொலை செய்தனர் என்றும் அவ்வாறு கொலை செய்ததற்கு பழியாக இந்து அமைப்பை சேர்ந்தவர்கள் தமுமுக தலைவர்மைதீன் சேட்கானை வெட்டி கொலை செய்ய முயற்சித்து வந்தனர் என்றும் இந்நிலையில் ஹனிபாவும், அப்துல்லாவும் பிணையில் வெளிவந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் மகளிர் காவல் நிலையத்தில் கையொப்பம் இட சென்றபோது அவர்களுக்கு பாதுகாப்பாக ஆட்டோவில் சிலர் சென்று வருவார்கள் என்றும் நாங்களும் செல்வோம் அல்லது அவர்கள் செல்லும் வழியில் மறைமுகமாக கடைகளில் நின்று கொண்டிருப்போம் என்றும் போலீசர் விசாரனையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.08.2007 தேதி காலை 10.15 மணிக்கு நிபந்தனை கையொப்பம் போட்டுவிட்டு இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோக்களில் திரும்ப வந்துகொண்டிருந்தபோது மீரான் மைதீன் மகன் அலாவுதீன் TN 72 x0558 என்ற யமஹாபைக்கிலும் TN76b9579, TN 76B 4974 என்ற ஆட்டோக்களில் அபுஅயூப்அன்சாரி , செய்யது அலி, முருகேசன் என்ற அப்துல்லாவும், முகமது பசீர் அசன்கனி, நாகூர்மீரான், மசூது, மற்றும் சிலரும் சுமார் 10.15 மணியளவில் தென்காசி எல்ஆர்எஸ்பாளையம் கூலக்கடை பஜாரை கடந்து மவுண்ட் ரோடு என்ற பகுதியில் கிழக்கு நோக்கி சென்றுகொண்டிருநதபோது முத்தாரம்மன் கோவில் அருகில் TN 72 Z 9757 என்ற வெள்ளை நிற அம்பாசிடர்காரை குமார்பாண்டியனின் சகோதரர்ககள் செந்தில், சக்தி பாண்டியன், கபிலன், சுப்பிரமணியன், சுரேந்திரன் ஆகியோர்

முன்னால் சென்ற யமாகா பைக்கின் மீது மோதி அந்த ஆட்டோவை வழி மறித்து அரிவாளுடன் காரில் இருந்து இறங்கி வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று சக்தி பாண்டியன் கூற மற்றவர்களும் ஓடிவந்தனர் என்றும் உடன் வந்தவர்கள் அங்கிருந்து மேற்காக ஓடியபோது முத்து டீக்கடை அருகில் இருந்த சேகர், மலையப்பன், தட்சணாமூர்த்தி, குட்டிமணி, சுரேஷ், பிஸ்தாமணி, சக்தி, கேபிள் டீவி முத்து, ஆட்டோ ரமேஷ், தங்கதுரைஅலெக்சாண்டர், இளநீர்கண்ணன், ஆகியோரும் அவர்களை சுற்றி வளைத்து தாக்கினார்கள் என்றும் அப்போது சுரேஷ் அரிவாளால் சைய்யது அலியை கழுத்தின் வலது பக்கம் மாறி மாறி வெட்டினார் என்றும் அபுஅயூப்அன்சாரி என்பவரை குட்டிமணி என்பவர் அரிவாளால் முதுகில் மாறிமாறி வெட்டினார் என்றும் கேபிள் டீவி முத்து அலாவுதீனின் தலையிலும், மீரான் மைதீன் வலது மார்பிலும் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேஷ் அரிவாளால் முகமது பசீர் மாறி மாறி வெட்டினார் என்றும், தங்கதுரை மற்றும் சேகர் என்னை வெட்டினார்கள் என்றும் அலெக்சாண்டர் அரிவாளால் நாகூர் மீரான் அசன்கனி ஆகியோர்களை வெட்டினார் என்றும் சக்தி பாண்டியன் முகமது பசீரின் தலையில் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேந்திரன் அரிவாளார் முகம்மது பசீரின் தலையிலும் அசன்கனியின் வலது விலா மற்றம் தொடை பகுதியில் வெட்டினார் என்றும் மலையான் தெருவை சேர்ந்த சண்முகம் இருப்பு பட்டையால் அப்துல்லாவின் முகத்திலும் தலையிலும் மாறி மாறி அடித்தார் என்றும் செந்தில் அரிவாளால் அசன்கனியை வெட்டினார் என்றும் பிஸ்தாமணி என்பவரும் அரிவாளால் அசன் கனி, மற்றும் முகம்மது பசீர் ஆகியோர்களை வெட்டினார் என்றும் சேகர் அரிவாளால் அசன்கனியை மாறி மாறி வெட்டினார் என்றும் அந்த சம்பவத்தில் நாங்களும் சேர்ந்து எதிரிகளை தாக்கினோம் என்றும் எதிரிகள்

தரப்பில் சுரேஷ், செந்தில் என்ற செந்தில் குமார், சேகர் ஆகியோர் இறந்ததாக கேள்விப்பட்டேன் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தில் அபுஅயூப்அன்சாரி, சைய்யது அலி, அலாவுதீன், முருகேசன் என்ற அப்துல்லா, இராஜாமுக்கமது, நவாஸ், ஹனிபா ஆகியோர்களுக்கும் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் பற்றி அறிந்து தமுமுக ஆம்புலன்சில் காயம் பட்டவர்களை சிகிச்சைக்கு ஏற்றிக்கொண்டு திருநெல்வேலி ை ஹகிரவுண்ட் மருத்துவனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சக்திபாண்டியன் வகையறா எங்கள் மீது கொடுத்த புகாரில் நாங்கள் இந்நீதிமன்றம் ஆஜராகி வருகிறோம். எங்களுக்கும் ,எதிரிகளுக்கும் ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கையின் படி நாங்கள் அந்த வழக்கில் இருந்து தப்பிக்கவும் எதிரிகள் மீதான வழக்கில் இருந்து அவர்கள் தப்பிக்கவும் போலீசார் விசாரணையின் போது கூறிய விபரங்களை மறைத்தும் சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்த விபரங்களை மறைத்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**